முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1299

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.04.2023, வியாழக்கிழமை

1. ஞானகுருவே அரங்கா வாழ்க
ஞானிகளை உலகில் படைக்க வேண்டி
வானவர்களே மெச்ச அவதாரம் புரிந்து
வள்ளலாய் வாழுகின்ற அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 07 ம் நாள், 20.04.2023 வியாழக்கிழமை)
தாழ்விலா அரங்கனின் சன்மார்க்கமே
தரணியில் உலகோர்க்கு வேதமாகும்
3. ஊழ்போக்கும் உயர்வழியாகும்
உண்மை காட்டும் ஞான நெறியாகும்
ஆகவே அரங்கன் சொல்செயல்கள் அனைத்தும் ஆக்கமாக உலகினில் நிரம்பிவர
யுகமாற்றம் இனிதே நடந்தேறும் உயர்மாந்தர்களாக உலகோரெல்லாம் மாறி
4. மாறியே கலியினிலும் ஞானவான்கள்
மகத்துவம் மிக்க படை பெருகி இனிதே
ஆறுதலாய் மக்களை காக்கும் வண்ணம்
அகிலத்தையே அமைதி பாதுகாப்புகொண்ட வண்ணம்
5. வண்ணமுடன் மாற்றுகின்ற மகா சூட்சுமங்கள்
வையகமெங்கும் அரங்கன் தயவாலே நிரம்பி
யுகமாற்றம் உலகமெங்கும் ஞான ஆட்சிக்காலமாகவும்
உண்மை வழி காட்டும் உயர் தலைவன் அமைந்த
6. வகையான பூமியாக இந்த உலகம்
வல்லமைபட அரங்கன் ஞானத்தால் மாறி
மாறியே உலகோர் ஞானிகளாவர்
மக்களெல்லாம் மாண்புகள் நிறைந்து இனிதே

7. ஆறுமுகன் என் ஆசிபட தேறி
அகிலத்தில் அழியாமை பெற்ற ஞானிகளாகவும் தேறுவர்
தேறவேண்டி அரங்கன் தொடர்பு கூட்டி
தேசமெங்கும் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்தால் போதும்

8. மாறுதல் சடுதி நடக்கும்
மக்களுக்கெல்லாம் ஆறுதலாக ஞானிகள் துணை பெருகி
அவரவர்க்கும் அறியாமை விலகி
ஆற்றல்பட அழியாமை உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—